**தலைப்பு – 188- தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொது பொழுதுபோக்குகள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| தலைப்பு | திணைக்களங்கள் |
|---|---|
| 294 | தேசிய விலங்குக் காட்சிச்சாலைகள் திணைக்களம் |
| 322 | தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொது பொழுது போக்குகள் அமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்களங்களில் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ள திகதிகளில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 188 | தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொது பொழுது போக்குகள் அமைச்சு | 2016 பெப்ரவரி 10 |
| 294 | தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களம் | 2016 பெப்ரவரி 10 |
| 322 | தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் | 2015 யூலை 18 |

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடு மற்றும் செலவினம்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரண்டு திணைக்களங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,550.9 மில்லியன் மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 1,180.4 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சினதும் திணைக்களங்களினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 5.8 மில்லியன் முதல் ரூபா 355.4 மில்லியன் வரையாக வீச்சளவில் அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 0.8 சதவீத்திற்கும் 48 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 188 | 150.38 | 141.13 | 9.25 | 6.15 |
| 294 | 661.83 | 656.01 | 5.82 | 0.88 |
| 322 | 738.73 | 383.31 | 355.42 | 48.11 |
| மொத்தம் | **1,550.9** | **1,180.45** | **370.49** | 23.89 |

## 2.2 வருமானக் கணக்குகள்

**மதிப்பீடு செய்யப்பட்ட, உள்ளபடியான வருமானம்**

அமைச்சின் கீழுள்ள திணைக்களமொன்றினால் 2014 ஆம் ஆண்டிற்காக வருமானத் தலைப்பொன்றிற்காக ரூபா 432.00 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 464.51 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 107.5 சதவீதமான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தன.

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரண்டு திணைக்களங்களிற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியான வை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியான வை | அதிகூடிய எல்லை | உள்ளபடியான வை |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 18801 | 2.06 | 2.06 | 0.30 | 1.04 | 5.00 | 3.33 |
| 29401 | 12.00 | 11. 93 | 8.00 | 9.50 | 58.00 | 46.31 |
| 32201 | 17.00 | 14.79 | 9.00 | 15.25 | 70.00 | 54.55 |

## 2.4. கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரண்டு திணைக்களங்களில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 153.49 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| அமைச்சு / திணைக்களம் | வைப்புக் கணக்கின் இலக்கம் | 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொது பொழுது போக்குகள் அமைச்சு | 7002/0000/00/0427/0014/000 | 16.62 |
| தேசிய விலங்குக்காட்சிகள் திணைக்களம் | 7002/0000/00/0146/0014/000 | 97.70 |
| தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் | 7002/0000/00/0405/0014/000 | 39.17 |
| மொத்தம் | | 153.49 |

## 2.5 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரண்டு திணைக்களங்களில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 176.66 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| அமைச்சு / திணைக்களம் | வைப்புக் கணக்கின் இலக்கம் | 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொது பொழுது போக்குகள் அமைச்சு | 6000/0000/00/0015/0204/000 | 29.00 |
| தேசிய விலங்குக்காட்சிகள் திணைக்களம் | 6000/0000/00/0008/0149/000 | 131.04 |
| தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் | 6000/0000/00/0015/0167/000 | 16.62 |
| மொத்தம் | | 176.66 |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொது பொழுது போக்குகள் அமைச்சினதும் அதன் கீழான திணைக்களங்களினதும் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தன. அம்முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியிலிருந்து 6 ஆம் பந்தி வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 188 – தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொது பொழுது போக்குகள் அமைச்சு

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கேள்வி மூலப்பிரதி, கையொப்பமிடப்பட்ட சம்பள அறிக்கை போன்ற தேவையான சான்றுகள் அமைச்சில் காணப்படாமையால் ரூபா 9,984,286 கூட்டுப் பெறுமதியான 02 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,750,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 04 செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அந்த செலவின

விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டின் 60 சதவீதத்திற்கும் 98.5 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

(இ) 1 ஆவது நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமைச்சு அலுவலகத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 2,707,027 தொகை 2 ஆவது நிகழ்ச்சித்திட்டத்தின் நிர்வாகம் மற்றும் தாபன செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தினால் அமைச்சின் நிர்மாணமொன்றிற்காக மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு ரூபா 25 மில்லியன் தொகை 2014 திசெம்பர் 22 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. அந்நிர்மாணம் தொடர்பான தொழில்நுட்ப அறிக்கை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கிடைக்காமையால் அது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது, 2015 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரையிலும் அப்பணம் திணைக்களத்திற்கு தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

18801 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் உள்ளவாறான வரவு மீதி ரூபா 3,328,421 ஆக இருந்தது. அதில் ரூபா 3,275,746 தொகை திணைக்களத்தில் சேவை புரியும் பதவியணியினரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 75,566 தொகை அறவிட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் எஞ்சிய ரூபா 22,891 ஆன கடன் மீதி தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.6.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 2014 ஆம் ஆண்டிற்காக அமைச்சின் செயற்பாடுகள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் செயற்பாடுகள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 3.6.2 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6.3 உள்ளகக் கணக்காய்வு

பதில் கடமை அடிப்படையில் 2014 ஒக்தோபர் 01 ஆந் திகதி உள்ளகக் கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டு போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.6.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டொன்றிற்கு 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்ட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் இரண்டு கூட்டத் தொடர்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2015 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் அவ்வறிக்கை 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**(ஆ) கையேற்கப்படாத சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

அமைச்சினால் முறைப்படி சொத்துக்கள் கையேற்கப்படாமல் அச்சொத்துக்களில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) குருணாகலை இன்துல்கொடகந்த நிஸ்ஸங்க மஹா வித்தியாலயத்தின் 2 ½ ஏக்கர் காணியில் சுற்றாடல் பூங்காவை நிர்மாணிப்பதற்காக அமைச்சினால் ரூபா 5 மில்லியன் தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்திற்கு 2014 செப்தம்பர் 30 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது.

(ii) கனேவத்த மருத்துவ பூங்காவின் பயிற்சி மண்டபத்தின் விரிவுரைக்கூடம் மற்றும் உணவு விடுதி என்பவற்றின் நிர்மாணத்திற்காக அமைச்சினால் ரூபா 7 மில்லியன் தாவரவியல் பூங்காத் திணைக்களத்திற்கு 2014 செப்தம்பர் 30 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. ஆண்டின் போது இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 10 மில்லியன் நிதிஏற்பாடுகளில் வேறு முதலீட்டு செலவின விடயத்திற்கு நிதிஏற்பாடு மாற்றப்பட்டு இது பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒரு வருடத்திற்குக் குறைந்த காலமாக இருந்து வரும் பொறுப்புக்களின் மொத்தம் ரூபா 398,695 ஆக இருந்தது.

**3.8 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| நிதிப் பிரமாணம் 104 மற்றும் 1642 | 239,758 | 03 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவை | | |
| (i) 3.2 வழிகாட்டல் | 38,880,309 | தேசிய விலங்குக் காட்சிச்சாலை திணைக்களத்தின் வாகொல்ல புதிய மிருகக் காட்சிசாலையின் 05 நிர்மாணங்களுக்கு கேள்வி கோராமல் சப்ரகமுவ சபையின் அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண அதிகாரசபைக்கு கையளிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது. |
| (ii) 2.74(ஈ) வழிகாட்டல் | 45,563,259 | தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளின் போது செய்யப்பட்ட 06 ஒப்பந்தங்கள் தொடர்பாக அமைச்சின் கொள்வனவுக் குழுவிற்கு சமூகமளித்த மூன்று உத்தியோகத்தர்களும் அமைச்சின் உள்ளக உத்தியோகத்தர்களாக இருந்ததுடன், வழிகாட்டலின் |

| | | | |
|---|---|---|---|
| | | | பிரகாரம் அமைச்சிற்கு வெளியே நிறுவனமொன்றின் உத்தியோகத்தரொருவரை அதற்காக பங்குபெறச் செய்திருக்கவில்லை. |
| (iii) | 2.14(1) வழிகாட்டல் | 186,870 | அமைச்சினால் 03 வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக 03 விலைகோரல் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இரண்டு விலை விபரங்கள் மாத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

## 3.9 செயலாற்றல்

----------------------

2014 ஆம் ஆண்டின் பாதீட்டு முன்மொழிவுகளில் பின்வரும் முன்மொழிவுகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அமைச்சினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) கொழும்பு – குரணாகலை, கொழும்பு – கண்டி மற்றும் கொழும்பு – காலி ஆகிய அதிவேக நெடுஞ்சாலைகளை அடிப்படையாகக் கொண்டு சேவை வழங்கும் நிலையங்களை தாபித்தல். (Comfort Centers)

(ஆ) சுற்றுலா கைத்தொழிலுக்கு பிரசித்திபெற்ற பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு சமுத்திர பாதுகாப்பு பூங்காக்களை (Ocean Parks) நிர்மாணிப்பின் கீழ் திருகோணமலை மாவட்டத்தின் நிலாவெளி பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு சமுத்திர சுற்றாடல் பூங்காவொன்றை அமைத்தல்.

(இ) பொருளாதார அமைச்சின் கீழ் இருந்த இந்த அமைச்சிற்கு கையளிப்பதற்கு உத்ததேசிக்கப்பட்டிருந்த சில விடுமுறை விடுதிகளை (Holiday Restaurant) எதிர்காலத்தில் இந்த அமைச்சிற்கு பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

(ஈ) வெளி மாகாணங்களிலிருந்து பல்வேறு கடமைககளுக்கு கொழும்பிற்கு வருகை தரும் அரச உத்தியோகத்தர்கள் தங்குவதற்காக திட்டமிடப்பட்ட விடுமுறை விடுதிகளை நிர்மாணித்தல்.

(உ) உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் செயற்படுத்தப்படும் தற்போது பராமரிக்கப்படாமல் இருக்கும் வாடிவீடுகளை திருத்தியமைத்து அவற்றை நிர்வகிப்பதற்கான உரிய முறைமையொன்றின் மூலம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகாரத்தை வழங்குவதற்காக அந்த வாடிவீடுகளை இந்த அமைச்சிற்கு பொறுப்பேற்றல்.

**3.10 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) அமைச்சினால் 2014 பெப்ரவரி மாதத்தின் போது ரூபா 6,682,950 தொகை செலவு செய்து வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர் தயாரிக்கப்பட்டிருந்த மாதிரிகளின் பிரகாரம் பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- Wheal base to be between 2500 - 2600 இருக்க வேண்டிய போதிலும், கொள்வனவு செய்யப்பட்ட வாகனத்தின் அந்த இடைவெளி 2968 ஆக இருந்தது.

- வாகனத்தின் ஆகக்கூடிய அகலம் 1700 மி.மீற்றரை விட மேற்படக்கூடாத போதிலும், கொள்வனவு செய்யப்பட்ட வாகனத்தின் அகலம் 1,869 மி.மீற்றராக இருந்தது.

  மேற்குறித்த வேறுபாட்டை சிறிய வேறுபாடாக கருதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அக்கேள்விதாரர் பரிந்துரைக்கப்பட்டிருந்தார்.

(ii) 2014 நவம்பர் மாதத்தின் போது ரூபா 9,595,729 ஆன மதிப்பீடொன்றுக்கு பிரதி அமைச்சரின் அலுவலகத்தின் நிர்மாண ஒப்பந்தம், கொள்வனவுச் செயற்பாட்டிலிருந்து விலகி புறம்பாக அரச கூட்டுத்தாபனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது.

## 3.11 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் அதிகாரமில்லாமல் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) பிரதி அமைச்சர் அலுவலகத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்கு கொள்வனவுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட செலவினம் ரூபா 9,429,703 ஆக இருந்த போதிலும், குறித்த செலவின விடயத்தின் கீழ் ரூபா 10,274,361 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கொள்வனவுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட செலவினம் ரூபா 844,688 ஆல் விஞ்சி நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) ரூபா 38,880,309 கிரயத்திலான பின்னவெல புதிய மிருகக்காட்சிசாலையின் நுழைவு பிரதேசத்தின் நிர்மாணம் 05 செயற்பாடுகளின் கீழ் வெவ்வேறாக இனங்காணப்பட்டு மிக அவசரம் மற்றும் அதிவிசேட நடவடிக்கைகளாக கருதி அரச கொள்வனவு நடைமுறைகளிலிருந்து விலகி முறையாக நியமிக்கப்படாத குழுவொன்றினால் தீர்மானிக்கப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

## 3.12 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 09 | 04 | 05 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 02 | - | - |
| (iii) | இரண்டாம் நிலை | 20 | 14 | 06 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 19 | 10 | 09 | - |
| (v) | ஏனையோர்(அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 10 | - | 10 |
| | மொத்தம் | 50 | 40 | 20 | 10 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மிகை பதவியணியினருக்காக முறையான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ள அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. தலைப்பு 294 – தேசிய விலங்குக் காட்சிசாலைகள் திணைக்களம்

### 4.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |

### 4.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 4.2.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,500,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 06 செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டின் 12.84 சதவீதத்திற்கும் 86.06 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

(இ) திணைக்கள நிதிஏற்பாடுகளுக்கு மேலதிகமாக விலங்குகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்திலிருந்தும் பயன்படுத்தப்பட்டமையால் தலைப்பின் கீழ் வரும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான செலவினங்களில் மிகை செலவினம் ஏற்படுவது தவிர்க்கப்பட்டிருந்தது. திணைக்களத்தின் ஒவ்வொரு உருப்படிக்காக திரட்டு மொத்த செலவினமும் மதிப்பீடு செய்யப்பட்டு திணைக்களம் மற்றும் நிதியத்திற்கிடையே குறிப்பான அடிப்படையொன்றில் செலவினம் பகிரப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கட்டுநிதிக் கணக்கு

-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 22 ஆந் திகதி திறைசேரியால் வழங்கப்பட்ட ரூபா 35,000,000 ஆன கட்டுநிதியில் ரூபா 30,000,000 தொகை பயன்படுத்தப்படாமல் 2014 திசெம்பர் 29 ஆந் திகதி திறைசேரிக்கு மீள அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்காக ரூபா 10,000,000 தொகை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி விலங்குகள் அபிவிருத்தி நிதியத்திலிருந்து மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 12 உத்தியோகத்தர்களுக்கு 13 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 205,000 கூட்டுத்தொகையானது செயல்நிமித்த உப கட்டுநிதி செயற்பாடுகள் முடிவடைந்து 1½ மாதம் முதல் 09 மாதங்கள் தாமதத்தின் பின்னர் கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது.

(இ) ஒரு செயற்பாட்டிற்காக குறித்த உத்தியோகத்தருக்கு மாத்திரம் கட்டுநிதி வழங்கப்பட வேண்டிய போதிலும், 04 செயற்பாடுகளுக்காக 19 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 404,500 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) செயல்நிமித்த கட்டுநிதியாக 05 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 71,000 கூட்டுத்தொகையானது குறித்த செயற்பாட்டிற்காக பயன்படுத்தாமல் 1½ மாதம் முதல் 9½ மாதங்கள் வரையான காலப்பகுதியில் கையில் வைத்திருந்து முழுத்தொகையும் திணைக்களத்திற்கு மீள தீர்க்கப்பட்டிருந்தது.

(உ) திணைக்களத்தினால் இரண்டு வங்கிக் கணக்குகளில் முறையே ரூபா 59,416,515 தொகை மற்றும் ரூபா 8,269,331 தொகையான மீதிகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அப்பணம் 2015 சனவரி 19 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

### 4.4 அரசாங்க ஊழியர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

29401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,321,890 ஆக இருந்ததுடன், அந் நிலுவை மீதிகள் 01 ஆண்டு முதல் 07 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து வந்த போதிலும், அந் நிலுவை மீதிகளை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலைமையில் இருநந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முற்பணக் கணக்கின் வரவு மீதி மற்றும் அத்திகதியில் உள்ளவாறு தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகைக்கும் இடையே ரூபா 63,504 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 4.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன், அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதாளிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

வாகொல்ல மிருகக்காட்சிசாலை நிர்மாணத்திற்காக கையளிக்கப்பட்டிருந்த வீதியின் இடது பக்க காணியின் 1.45 ஹெக்டேயர் 15 ஆண்டுகளாக குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2015 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் அவ்வறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

திணைக்களத்தினால் முறைப்படி கையேற்கப்படாத 15 ஏக்கர் அளவிலான கோனபலவில் அமைந்துள்ள காணியொன்றில் மிருகக்காட்சிசாலை பண்ணை பேணப்பட்டு சென்றிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஒரு வருடத்திற்குக் குறைந்த காலமாக இருந்து வரும் ரூபா 159,192,176 கூட்டுத்தொகையான தீர்க்கப்படாத பொறுப்புக்கள் காணப்பட்டன.

**4.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.74(ஈ) வழிகாட்டலின் பிரகாரம் அமைச்சின் கொள்வனவுக் குழுவிற்கு அமைச்சிற்கு வெளியே நபரொருவர் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தின் வாகொல்ல புதிய மிருகக்காட்சிசாலையின் நிர்மாணங்களுக்கான ரூபா 62.6 மில்லியனான ஒப்பந்தங்களை

வழங்குவதற்கான கொள்வனவுக் குழுவின் மூன்று அங்கத்தவர்களும் அமைச்சின் உத்தியோகத்தர்களாக இருந்தனர்.

**4.8 செயலாற்றல்**

-----------------------

வத்தள ஹமில்டன் கால்வாய்க்கு அண்மையில் சுற்றுலா செயற்திட்டத்திற்கு இணையாக தேசிய மட்டத்தில் மீன்தொட்டியொன்று நிர்மாணிப்பதற்கு 2009 ஆம் அண்டிலிருந்து மதிப்பீடு நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டின் போதும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 5,000,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் போது அச்செயற்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த போதிலும், 2015 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையிலும் அச்செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

------------------------------------------------------------

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் இருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) திணைக்களத்தின் பிரதான திட்டத்தின் பிரகாரம் தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் மத்திய தரத்திலான இரண்டு உத்தியோகபூர்வ வீடுகளையும் சுற்றுலா விடுதியொன்றையும் நிர்மாணிப்பதற்குரிய ஒப்பந்தம் 2012 நவம்பர் 02 ஆந் திகதி கட்டிடத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் அதற்காக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், கட்டிடத் திணைக்களத்திற்கு இந்நிர்மாண ஒப்பந்தத்தை வழங்குவது தொடர்பில் திணைக்கள கொள்வனவுக் குழு அங்கீகாரமொன்றை வழங்கியிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2014 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் இச்செயற்பாட்டிற்காக ரூபா 30 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் திணைக்களத்தினால் சுற்றுலா விடுதி நிர்மாணிப்பதை கைவிட்டு அதற்குப் பதிலாக 03 மத்திய தரத்திலான உத்தியோகபூர்வ வீடுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதற்காக ரூபா 17.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், சுற்றுலா விடுதிக்குப் பதிலாக உத்தியோகபூர்வ வீட்டை நிர்மாணிப்பதற்காகப் பெற்றுக்கொண்ட அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

மிருகக்காட்சிசாலை 23 ஏக்கர் அளவிலான மட்டுப்படுத்தப்பட்ட இடவசதிகளுடன் பேணப்பட்டு வருவதுடன், தற்போதில் அதில் 27 உத்தியோகபூர்வ வீடுகள் காணப்படுகையில் மேலும் உத்தியோகபூர்வ வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன், மிருகக்காட்சிசாலை வளவு தொடர்பான பிரதான திட்டமொன்று சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) பின்னவல புதிய மிருகக்காட்சிசாலையின் நுழைவு வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 77,627,967 தொகையான 11 ஒப்பந்தங்கள், சப்ரகமுவ மாகாண சபையின் அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண அதிகாரசபைக்கு 2014 ஆம் ஆண்டின் போது கையளிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 62.6 மில்லியன் அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2014 பெப்ரவரி மாதத்தின் போது ‘‘தேசத்திற்கு மகுடம்’’ இற்கு இணையாக திறந்து வைக்கும் நோக்கில் கேள்வி கோருவதற்கு அதிக காலம் செலவாகுமெனவும் மிக அவசரமான செயற்பாடொன்றாகவும் குறிப்பிடப்பட்டு அரசாங்க கொள்வனவு நடைமுறைக்குப் புறம்பாக சப்ரகமுவ மாகாண சபையின் அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண அதிகாரசபைக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இம்மிருகக்காட்சிசாலை திறந்து வைக்கப்படாதிருந்ததுடன் நிர்மாணங்களின் காலமும் 1 மாதம் முதல் 4½ மாதங்கள் வரை நீடிக்கப்பட்டிருந்தது.

- அமைச்சின் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரிய அனைத்து மதியுரை நடவடிக்கைகள் 13/1434/562/008 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கையில் அதற்கு முரணாக இதன் மதியுரை செயற்பாடுகள் இலங்கை கைப்பணிகள் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அற்காக ரூபா 4,997,597 செலுத்தப்பட்டிருந்தது.

- இலங்கை கைப்பணிகள் சபையின் மதியுரையாளராக ஒரு உத்தியோகத்தர் (கட்டிட கலைஞர்) அனைத்து கடிதங்களிலும் கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும், அவர் பணிப்பொறுப்பு அடிப்படையில் கடமை புரியும் உத்தியோகத்தராக இருந்தார்.

- மேலும் இந்த 11 ஒப்பந்தங்களுக்குரிய பொறியியலாளர் மதிப்பீடு கைப்பணிகள் சபையினால் தயாரிக்கப்பட்டமைக்கான சான்றுகள் கோவையில் இல்லாதிருந்ததுடன், சப்ரகமுவ மாகாண சபையின் அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு கொள்வனவுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக மதியுரையாளரால் ஒப்பந்தம் மேற்பார்வை செய்யப்பட்டதாக சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 4.10 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது ரூபா 5 மில்லியன் செலவிடப்பட்டு தேசிய விலங்குக் காட்சிச்சாலைகள் திணைக்களத்தின் சபாரி பூங்காவிற்கு 02 தீக்கோழி சோடிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்த தீக்கோழிகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யாமல் இலங்கையிலேயே கொள்வனவு செய்வது பொருத்தமென மேலதிக பணிப்பாளரினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

மேலதிக பணிப்பாளரினால் பத்திரிகை அறிவித்தல் மூலம் கேள்வி கோரி இக்கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பணிப்பாளரால் மட்டுப்படுத்தப்பட்ட கூறுவிலை கோருமாறு குறிப்புக்கள் மூலம் (minutes) குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 06 நபர்களிடமிருந்து மாத்திரம் கூறுவிலை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் இரண்டு பேர் மாத்திரம் கூறுவிலையை சமர்ப்பித்திருந்தனர். அவ்விருவருக்கும் கூறுவிலை கோரும் கடிதத்தின் நிபந்தனையின் பிரகாரம் தேவையான தகைமையான Fauna and Flora Protection Ordinance இன் கீழ் இம்மிருகங்களுக்குரிய அனுமதிப்பத்திரத்தை உரித்துடைய நபர்கள் அல்லாதிருந்தனர். மேற்குறித்த விடயங்களை கருத்திற் கொள்ளும் போது பணிப்பாளரினால் எடுக்கப்பட்டிருந்த தீர்மானம் சர்ச்சைக்குரிய ஒன்றாக இருந்தது. கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படையாக இடம் பெறாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.11 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 29 | 21 | 08 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | - | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 158 | 110 | 48 |
| (iv) | ஆரம்ப நிலை | 587 | 312 | 173 |
| (v) | ஏனையோர் (அமைய) | - | 102 | - |
| | மொத்தம் | 776 | 545 | 231 |

## 5. தலைப்பு 322 – தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம்

### 5.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

(இ) மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு — நிதிப்பிரமாணம் 454(2)

(ஈ) பொறுப்புக்கள் பதிவேடு — நிதிப்பிரமாணம் 214

(உ) வாகனப் பட்டியல் பதிவேடு — நிதிப்பிரமாணம் 1647(உ)

**5.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

-----------------------------------

**பாதீட்டு முரண்**

------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வட மாகாணத்தில் தாவரவியல் பூங்காவொன்றை அமைப்பதற்காக பொருத்தமான இடமொன்றை தெரிவுசெய்வதற்கு முடியாத காரணத்தினால் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,000,000 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 02 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டதன் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 12 சதவீதம் தொடக்கம் 51 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டன.

**5.3 பொது வைப்புக் கணக்கு**

-------------------------------------------

02 வருடங்களை விஞ்சிய ரூபா 3,282,728 கூட்டுத்தொகையான 22 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 வருமானக் கணக்கு**

--------------------------------

திணைக்களத் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 20.03.02.19 ஆம் வருமானக் குறியீட்டின் கீழ் வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற செயற்பாடுகள் கையளிக்கப்பட்டிருந்தன. வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 432 மில்லியன் வருமானத்தைச் சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 464.5 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 7.5 சதவீதமான மிகை உழைப்பு தொடர்பாக திணைக்களத்தினால் திருத்திய வருமான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அரசசிறைக் கொள்கைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

32201 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 440,625 ஆக இருந்ததுடன், அம்மொத்த மீதிகளும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. அம்மீதிகளில் ரூபா 200,675 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ii) 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் 04 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,561,113 ஆன இடர் கடன் செலுத்தப்பட்டிருந்தது.

**5.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) வெளித் தரப்பினர்களினால் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள்**

ஹக்கல தாவரவியல் பூங்காவிற்குச் சொந்தமான 18 ஹெக்டேயர் காணி அனுமதியற்ற வகையில் வெளித் தரப்பினர்களினால் கைப்பற்றப்பட்டிருந்தது.

**(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தினால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கும் குறைவாக இருந்த தீர்க்கப்படாத பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 6,747,945 ஆக இருந்தது.

## 5.7 செயலாற்றல்

2014 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

மலர் வளர்க்கும் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் பூங்கா அலங்காரம் என்பவற்றைப் பிரசித்தப்படுத்துவதற்கு தேவையான ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல் திணைக்களத்தின் பிரதான செயற்பாடாக இருந்த போதிலும், அதற்காக மலர் வளர்ப்பதை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 500,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த ஏற்பாடுகளில் ரூபா 22,200 அல்லது 4.4 சதவீதமும் பூங்கா ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 250,000 ஆன நிதி ஏற்பாட்டில் ரூபா 7,299 தொகை அல்லது 2.9 சதவீதம் போன்ற மிகவும் குறைந்த மட்டத்தில் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது.

### (ஆ) திட்டமிடல்

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் கொள்வனவுத் திட்டத்திலும் ரூபா 1,150,000 தொகையான நிதிஏற்பாடு செய்யப்பட்ட 03 செயற்பாடுகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன், 08 செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 10,300,000 ஆன நிதி ஏற்பாடுகளில் ரூபா 2,461,555 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்தளவு ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாட்டின் 05 சதவீதம் முதல் 47 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தது.

## 5.8 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 33 | 15 | 18 |
| (ii) | மூன்றாம் நிலை | 09 | 05 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 186 | 106 | 80 |
| (iv) | ஆரம்ப நிலை | 516 | 502 | 14 |
| | மொத்தம் | 744 | 628 | 116 |